முருகப்பெருமான் துணை

**மகான் இளையான்குடிமாற நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.02.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. மக்களை காத்திட வந்தநல்
   மாதவராஜனே ஞான தேசிகனே
   தேக்கமின்றி உலகோர் துன்பங்களை
   துடைத்தெறிய வந்த குருராசனே
2. அரசனே அரங்கனே உமைபோற்றி
   அருளுவேன் அனுகூல ஆசி
   வரமென சுபகிருது கலை திங்கள்
   வல்லமைபட இருபானீர் திகதி கதிர்வாரம்
   **(சுபகிருது வருடம் தை மாதம் 22ம் நாள் 05.02.2023, ஞாயிற்றுக்கிழமை)**
3. வாரமதில் இளையான்குடிமாற நாயனாரும்
   வழங்குவேன் வையகம் நலம்பெற
   சோரமின்றி உலகம் உய்வுபெற
   சுத்தநெறி காட்டும் அரங்கமகான்
4. மகானின் திருவடி பற்றி
   மண்ணுலகில் தீட்சை ஆசி
   வகைபட மக்களெல்லாம் ஏற்று
   வணங்கிவர மாற்றம் உண்டு
5. உண்டான தருமபலம் பெற
   உலகோர் அரங்கன் அன்னதானசேவை
   கண்டடைந்து கலந்து இனிதே
   கருணை பெருக பொருளுதவிசெய்து
6. செய்துமே தருமம் வளர்க்க
   சீடராக அரங்கன் செபதபம்
   அய்யமற தொடர்ந்து செய்ய
   அனுகூலம் மேலவர் வழிகிட்டி
7. கிட்டியே தரும ஞானமாக
   குருவருளாக சகல ஆற்றலும்
   தட்டாது வரமாக வந்துமே
   தரணியோர் பாதுகாப்புதனை அடைவர்
8. அடையவே கலியின் மாற்றமாக
   அகிலம் எங்கிலும் தீவினைகள்
   தடையின்றி ஒழிந்து அகன்று
   தரணியே சுத்தி செய்யப்படும்
9. செய்யப்படும் உண்மை நெறியாக
   சேவைகளெல்லாம் துறைவழி
   அய்யம் குழப்பம் சலனம் இல்லா
   அனைவருக்கும் கிட்டும் நீதிதருமமாக

10. ஆகவே எங்கும் எவற்றிலும்
அற்புதம் கூடி இனிதே
செகமே வளர்ச்சி மாற்றம்
சித்திகளும் பலவாற் கண்டு

11. கண்டுமே நல்லுலகமாம் கூறிட
கந்தவேலவன் தலைமை ஏற்ற
தொண்டுமிக்க ஞானஉலகமாக மாறும்
தெரிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–